DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

Calender .. ..

Miscellaneous .. .. Case No. **CC 188/2013**
Preliminary Register

Sessions .. ..

Deposition of witness for : Prosecution **PW- 5**

Deffence

Court

Name : மாதன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1875 on the day of

**08.04.2022 -** முதல் விசாரணை
சத்தியமாக சொல்கிறேன்,

நான் தற்போது தெப்பக்காடு சரகத்தில் வேட்டைத்தடுப்பு காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.07.2012 அன்று நான் இதே பணியிலிருந்தேன். அப்போது, வனச்சரக அலுவலர் ஆரோக்கியசாமி, வனக்காப்பாளர் சந்தனராஜு மற்றும் ஆனந்த், வனவர் ஆறுமுகம், வேட்டைத்தடுப்பு காவலர் பொம்மன் ஆகியோர்களுடன் நானும் ரோந்து அலுவலாக சென்றோம். இம்பர்லா பகுதியில் சுமார் 05.00 மணியளவில் சென்றபோது ஆட்கள் நடமாடும் சத்தம் கேட்டது. நாங்கள் அருகில்

சென்று பார்த்தபோது மொத்தம் 10 நபர்கள் அங்க நடமாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் குஞ்சன் என்பவர் மரம் வெட்டிக்கொண்டிருந்தார். அந்த நபர்களில் 3 நபர்களை நாங்கள் பிடித்துவிட்டோம் மற்ற நபர்கள் ஓடிவிட்டார்கள். குஞ்சன், அங்கன் மற்றும் குட்டன் ஆகியோர்களை நாங்கள் பிடித்தோம். ஓடிய நபர்கள் யார் என்று ஞாபகமில்லை. மேற்படி 3 எதிரிகளை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும் (எதிரிகள் குஞ்சன் மற்றும் குட்டன் ஆகியோர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை அவர்களுக்கான கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது எதிரி அங்கன் தற்போது உயிருடன் இல்லை). இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சான்று பொருட்களை அந்த எதிரிகள் வைத்திருந்தார்கள். எதிரிகள் உடும்பை சமைத்து சாப்பிட்டதாக கூறினார்கள். எதிரிகளையும் பிடிபொருட்களையும் நாங்கள் எங்களின் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம்.

**குறுக்கு விசாரணை:**

நாங்கள் மொத்தம் எத்தனை பேர் ரோந்து சென்றோம் என்றால் 6 பேர் சென்றோம். நாங்கள் போன போது எதிரிகள் மரம் வெட்டிக்கொண்டிருந்தார்களா என்றால் ஒருத்தர் மரம் வெட்டிக்கொண்டிருந்தார். நாங்கள் 3 பேரை பிடித்து வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்தோம் என்றால் சரிதான். வனச்சரக அலுவலகத்தில் எதிரிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு எதிரிகள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள் என்றால் சரிதான். குஞ்சன் சொன்னதின் பேரில் தான் மொத்தம் 10 பேர் என தெரியவந்தது என்றால் சரிதான். எதிரிகள் ஆதிவாசிகள் என்றால் சரிதான். அவர்களுக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான்.

அவர்கள் வனத்தை ஒட்டி வசிக்கிறார்கள் என்றால் சரிதான். வனச்சரகர் கூறியதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read
over interpreted to the witness and same has
been admitted by the witness to be correct.

(Sd/.Thiru.S.R.Babu)
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-**
JUDICIAL MAGISTRATE, GUDALUR.